தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 15, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 29, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

பெருமைப் பண்பு உடையவர்கள் செய்தற்கு அரிய செயல்களையே அவற்றுக்கு உரிய வழியில் நன்கு செய்து முடிக்க வல்லவர்கள் ஆவர்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 141, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

141—

கல்வராயன் மலையில் வாக்குச்சாவடிகள் அமைத்தல்

*24944—திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில், மணியார்பாளையம், கிளாக்காடு, தொடரிப்பட்டு, வஞ்சிக்குழி ஆகிய இடங்களில் வாக்குச்சாவடி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[1995 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கல்வராயன் மலையில் மணியார்பாளையம், கிளாக்காடு, தொரடிப்பட்டு, வஞ்சிக்குழி ஆகிய கிராமங்களில், தொரடிப்பட்டு கிராமத்தைத் தவிர ஏனைய கிராமங்களில் வாக்குச்சாவடிகள் உள்ளன. தொரடிப்பட்டு கிராமத்திற்கு என தனி வாக்குச்சாவடி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் சாலைகள் பஸ் போக்குவரத்து இல்லாத ஊர்களாக அமைந்துள்ளன. தொரடிப்பட்டு மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். அங்கிருந்து வெள்ளிமலை அல்லது கழியாலூர் வருவது என்றால் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் காட்டுப் பாதையில் மலைப் பாதையில் உள்ள வழித்தடத்தில் வரவேண்டியதாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொரடிப்பட்டில் வாக்குச்சாவடி அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையில் உள்ள தொரடிப்பட்டு கிராமத்தில் மொத்தம் 417 வாக்காளர்கள் உள்ளனர். அதிலே ஆண்கள் 200 பேர், பெண்கள் 217 பேர். இந்த வாக்காளர்கள் தற்போது 4 கிலோ மீட்டர் நடந்து சென்று மட்டப்பட்டு வாக்குச்சாவடியில் வாக்களித்து வருகின்றனர். கடந்த பொதுத் தேர்தலின்போது தொரடிப்பட்டு வாக்காளர்கள், மட்டப்பட்டு வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிப்பது குறித்து எந்தவித ஆட்சேபனையும், இடர்பாடுகளும் இருப்பதாக தெரிவிக்கவில்லை. எனவே தொரடிப்பட்டு கிராமத்தில் வாக்குசாவடி அமைத்துக் கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொரடிப்பட்டுக்கு அப்பால் உள்ள மான்கொம்பு மற்றும் சில ஊர்களில் உள்ளவர்களும் மட்டப்பட்டுக்கு வாக்களிக்கச் செல்லவேண்டி இருப்பதால், காட்டுப் பாதையாக இருப்பதால், பக்கத்தில் உள்ள கிராமங்களை எல்லாம் சேர்த்து, மலைவாழ் மக்களின் நலனைக் கருதி, தொரடிப்பட்டிலேயே வாக்குச்சாவடி அமைக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகபட்சமாக 1000 வாக்காளர்கள் ஒரு வாக்குச் சாவடிக்கு இருக்க வேண்டுமென்பது தேர்தல் ஆணையத்தினுடைய குறிப்பாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்டு ஒரு வாக்குச்சாவடிக்குச் செல்லுகிறார்கள் என்று சொன்னால் அதை இரண்டாகப் பிரிப்பதிலே பொருள் இருக்கிறது. ஆனால் மடப்பட்டு, தொரடிப்பட்டு, மாத்தூர், எருக்கம்பட்டு, மேல்மருகம் ஆகிய அவ்வளவு ஊர்களையும் சேர்த்து 760 வாக்காளர்கள்தான் ஆண்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே வருகிறார்கள். பெண்கள் பகுதியைப் பொறுத்தவரையில் மடப்பட்டு, தொரடிப்பட்டு, மாத்தூர், எருக்கம்பட்டு, மேல்மருகம் ஆகிய ஊர்களிலிருந்து 812 பேர் வருகிறார்கள். தொரடிப்பட்டு ஊரிலே ஆண்கள் 200 பேரும் பெண்கள் 217 பேரும், ஆக 417 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென ஒரு தனி வாக்குசாவடி அமைப்பதற்கு வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

142—

ஆரணி ஒன்றியம், எம். ஜி. ஆர். நகர் வாசிகளுக்கு பட்டா வழங்குதல்

10869*—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி ஒன்றியம், பையூர் குளக்கரை எம்.ஜி. ஆர். நகர் வாசிகளுக்கு பட்டா அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆரணி வட்டம், பையூர் கிராமம், எம்.ஜி.ஆர். நகரில் உள்ள நிலம் குட்டை புறம்போக்கு நிலமாகும். குட்டைப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை வழங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. குட்டை புறம்போக்கு நிலங்களை நத்தமாக மாற்றுவதால் இயற்கை நீர்வளம் பாதிக்கப்படும் என்பதால் மேற்படி இடத்திற்குப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.